செய்தி வெளியீடு எண்.517 **நாள்.13.8.2007**

உள், மதுவிலக்கு(ம)ஆயத்தீர்வைத்துறை

அரசு செய்திக் குறிப்பு

தமிழக அரசு கம்பிவட தொலைக்காட்சி (Cable TV) சேவையை தொடங்குவது சம்பந்தமாக 11.8.2007 அன்று அமைச்சரவைக் கூட்டத்தில் எடுத்த முடிவின் அடிப்படையில், அரசு கேபிள் டி.வி. கார்ப்பரேஷன் என்ற புதிய அரசு பொதுத்துறை நிறுவனம் தொடங்கப்படும் என்றும், இந்த நிறுவனத்தில் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநரைத் தவிர நிதித்துறை செயலர், தகவல் தொழில்நுட்பத்துறை செயலர், நிர்வாக இயக்குநர், தமிழ்நாடு மின்னணு நிறுவனம் மற்றும் தமிழ்நாடு மின்வாரியத்தின் தலைவர் ஆகியோர் இயக்குநர்களாகப் பணிபுரிவார்கள் என்றும், இந்தப் புதிய அரசு பொதுத்துறை நிறுவனம் தகவல் மற்றும் தொழில் நுட்பத் துறையின் கீழ் இயங்கும் என்றும் அரசு ஆணையிட்டுள்ளது.

செயலர்,
உள் துறை, மதுவிலக்கு(ம)ஆயத்தீர்வைத்துறை

****

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.